



அமரர்

# சண்முகம் பாக்கியம்

## நினைவு மலர்

16.12.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பச்சிலைப்பள்ளி அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்
புலோப்பளை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் **சண்முகம் பாக்கியம்**

**அவர்களின் சிவபதப்பேறு குறித்த**

# "நினைவு மலர்"

## 16.12.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நொந்து நோகாமல் சுமந்து உழைத்து
உணவளித்து அந்திப்பகல் பாராது
கையில் கொண்டு எமைக் காப்பாற்றி
தன் மெய் வருத்தம் பாராது எமக்காக
வாழ்ந்து எம் உயர்விற்கு ஒளியாய்
உதவியளித்த எம் இனிய
அன்னைக்காய், அன்னையின் நீங்கா
நினைவுக்காய் ஆக்கிய இம்மலர் அவர்
தினம் வணங்கும் முருகப்பெருமானின்
பாதார விந்தங்களுக்கு சமர்ப்பணம்
செய்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



தோற்றம்
1930.12.16

மறைவு
2022.11.16

அமரர்

# சண்முகம் பாக்கியம்

## திதி நிர்ணய வெண்பா

**பிலவ வருடம் பிந்திய கார்த்திகையில்
புதனொடு ஆயிலியம் கூடி நிற்க
அவிட்ட திதியில் அமரர் சண்முகம் பாக்கியம்
உயிர் நீத்து முருகனடி சேர்த்தாரென்றறி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

## திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுவ்
குற்றாலத் தமர்துறையுங் கூத்தாகவும் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆருமே பெறதாக வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும்விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பங்கயக்கண் அருவிநீர் பாய நின்று
பரவும் இசைத் திருப்பதிகம் பாடியாடித்
தங்கு பெருக் கனிகாதல் தகைந்து தட்பத்
தம் பெருமான் கழல் பேற்றுந் தன்மை நீட
அங்கரிகற் புறம் போந்தவ் கயன்மால் போற்ற
அறியாந்தந் திருமறைக்கீழ் அணைந்தி றைஞ்சிப்
பொங்கு திருத் தொண்டர்மடங் கட்ட அங்குப்
புக்கருளி இனிதமர்ந்தார் புகலிவேந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனா
இபமா முகன் தனக் கிளையோனோ
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளாத்துயில் கொண்ட எம்மினிய அன்னையின் மீள்பார்வை

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்துள்ள பசுமை நிறை பச்சிலைப்பள்ளியில் அல்லிப்பளையிலே 1930ம் ஆண்டு 12ம் மாதம் 16ம் திகதி அமரர் வல்லிபுரம் பார்வதி தம்பதியினருக்கு முதல் புத்திரியாக அமரர் பாக்கியம் அவதரித்தார். பின்னர் புலோப்பளை மேற்கு பளையை வதிவிடமாகக் கொண்டவருமான பாக்கியம் அவர்கள் தங்கம்மா, இலட்சுமிப்பிள்ளை ஆகிய இருவரையும் சகோதரிகளாகப் பெற்று அன்னைக்கு இலக்கணமாய் வாழ்ந்து வரும்கால் செம்பியன்பற்று மருதங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சண்முகம் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.

இரு உயிரும் ஓருயிராய் இரு மனமும் ஒரு மனமாகி வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து வரும் கால் இருவருக்கும் முதற்பிள்ளையாக பெண்பிள்ளை சரஸ்வதியையும் ஆண்பிள்ளைகளாக கயிலாயநாதன் (கயிலாயம்), யோகநாதன் (யோகு), தில்லைநாதன் (குணம்), பத்மநாதன் (சிவா), சத்தியநாதன் (ராசன்), நிமநாதன் (நாதன்) ஆகிய பஞ்சபுத்திரர்களை பெற்றும், தாயற்றவருக்கு தாயாகவும் சிறுவயதுதொட்டு தனது மூத்த பிள்ளையாக கந்தசாமி தங்கரத்தினம் (ரத்தினம்) என்பவரையும் தமது குல தெய்வங்களான அறத்தி முருகன், அறத்தி அம்மன், இரட்டைகேணி அம்மன், மண்டலாய் பிள்ளையார், கச்சார் வெளிப்பிள்ளையார் துணையுடன் சீரும் சிறப்புமாக இறை ஆசியுடன் வளர்த்து வந்தனர்.

எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது பிள்ளைகளின் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு பாக்கியம் அவர்கள் தனது பிள்ளைகளை வெளிநாடுகளிற்கு அனுப்பி வைத்து விட்டு இளைய புதல்வன் நிமநாதன் இல்லத்தில் அனைத்து பிள்ளைகளின் அரவணைப்புடன் வாழ்ந்து வரலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சண்முகம் பாக்கியம் அவர்கள் தனது பிள்ளைகளுக் கேற்ற துணைகளைத்தேடி திருமணபந்தத்தில் இணைத்துக் கொள்ள அவாகொண்டு தனது முதற் பிள்ளை சரஸ்வதிக்கு இவ் ஊரைச்சேர்ந்த இளையதம்பி கனகரத்தினம் அவர்களையும் மகன்மார்களான கயிலாயத்திற்கு சந்திராதேவி (ராசாத்தி), யோகநாதனுக்கு கிருபாலட்சுமி (கிருபா) அவர்களையும், தில்லைநாதனுக்கு பவானி அவர்களையும், பத்மநாதனுக்கு பாக்கியலட்சுமி அவர்களையும், சத்தியநாதனுக்கு அருட்செல்வி (வசந்தா)அவர்களையும், நிமநாதனுக்கு உதயரூபி (ரூபி) அவர்களையும் திருமணம் முடித்து வைத்தார்.

அமரர் சண்முகம் பாக்கியம் அவர்கள் தனது உற்ற துணையை காலனவன் கவர்ந்த பின்பும் தனது பிள்ளைகளின் துணைகொண்டு வாழலானார். இவ்வாறு வாழ்ந்து வரும்கால் அவர்களது பிள்ளைகள் தாயை விட்டுத் தனித்திருந்தாலும் தாய்மீது விழித்திருந்து தாயுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனவே செய்து வந்தனர்.

தம் வாழ்நாளில், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேத்தியென நான்கு பரம்பரையைக் காணும் வரத்தினையும் பெற்று மகிழ்ந்த பெருமையையும் பெற்றவர் என்பது சிறப்பான கொடையாகும்.

அந்த வகையில் பேரப்பிள்ளைகளாக ரேணுகா, ரமேஸ், சுரேஸ், சசிகாந்தன், சந்திரிக்கா, சன்சிகா, சபீக்கா, சஞ்சிகாந்தன், துளசிகா, பகீரதன், பவித்திரன், விஷ்ணுகா, யசிக்கா, நிஷானா, நிவ்வியன், நிவ்வியா ஆகியோரையும் ஜீனுகா, லஜீக்கா, சார்க்கோண், மேசா, கரிஷான், சசிஷன், சஷ்வினா, யனுசன், சஸ்வின், அகிஷா, அஷ்னா, பகீஷன், பவிஸ்னா, சஞ்சனா, றெகான்சாய், நிலுக்ஷி, நிதிறா ஆகியோரைப் பூட்டப்பிள்ளைகளாகவும் பெற்று அக மகிழ்ந்து வரும் வேளை தனது குடும்ப விருட்சத்தின் நான்காவது பரம்பரை கொள்ளுப் பேத்தியாக அயானா, அவர்களையும் கண்டு மிக்க சந்தோசத்துடன் வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பாக்கியம் தனது உடன் பிறப்புக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேத்திகள் போன்றோரையும் அண்டி அணைத்து வாழ்ந்து வரும் கால் 92வது வயதில் 16.11.2022ல் எமையெல்லாம் விட்டுப் பிரிந்து முருகக் கடவுளின் பாத அடிசேர்ந்தார்.

முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பிள்ளைகள் நினைவிலிருந்து*

குடும்பமெனும் கோயிலில் குடியிருந்த
குல விளக்கே
தித்திக்கப் பேசிடும் எம் வண்ணக்கிளி
கூண்டைவிட்டுப் போன தெங்கே
தளர்த்து நீ பிரிந்திருந்தாலும் தாயே
உன் மீது நாம் விழித்திருந்தோம்
நாடு தேசம் விட்டு தாம் சென்றாலும் நாடியே
உனைத்தேடி நாம் வந்து சென்றோம்
அம்மாவென்ற வார்த்தையிழந்து நாம்
கதறியன ஓடி நீ ஒழித்ததெங்கே
எத்தனை செல்வம் பெற்றிருந்தும்
தாயே நீயே எம் அழியாச் செல்வமன்றோ

**பிள்ளைகள்,**
**சரஸ்வதி, கயிலாயபிள்ளை, யோகநாதன், தில்லைநாதன்,**
**பத்மநாதன், சத்தியநாதன், நிமலநாதன்**

## *மருமக்கள் மனதிலிருந்து*

அன்னை வடிவில் எமை அரவணைத்த
மாமி எனும் மாதருள் மாணிக்கமே
அழகுக்கு அழகு சேர்த்த அன்பின் பொக்கிசமே
ஆரும் அறியாது அன்னையவளே சென்றதெங்கே
கண்ணியமது உன் புகழ் என எடுத்துரைத்தாய்
ஏழைக்குத் தருமம் எனும் பூப்பூத்தவரே
மருமக்கள் என்றில்லாது மக்களே என் அணைத்தாய்
நித்தலும் நீறணிந்த முகமொழி வீசும் உன்
உடல் வெந்து வெண்ணீறாகிய சேய்திகேட்டு
வெம்பி அழும் நாமுமாச்சோ

**மருமக்கள்,**
**கனகரத்தினம், சந்திராதேவி, கிருபாலட்சுமி, பவானி,**
**பாக்கியலட்சுமி, அருட்செல்வி, உதயரூபி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பேரப்பிள்ளைகள் புலம்பல்*

நீல வானில் வெள்ளி ஓடம் காட்டி
நிலத்திலிருத்தி நிலா சோறூட்டிய அம்மம்மாவே
நீண்டதூரம் நாம் உனைப் பிரிந்தாலும்
நித்தமும் உன் நினைவில் நாமிருந்தோம்
அப்பம்மா அப்பப்பம்மா எனும் சொல்லை
வற்றவிட்டு விடைபெற்றதெங்கே
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் அப்பம்மாவே
எம் குலவிளக்காய் வந்தொளிர்வாயே

**ரேணுகா, ரமேஸ், சுரேஸ், சசிகாந்தன், சந்திரிக்கா, சன்சிகா, சபீக்கா, சஞ்சிகாந்தன், துளசிகா, பகீரதன், பவித்திரன், விஷ்ணுகா, யசிக்கா, நிஷானா, நிவ்வியன், நிவ்வியா**

## *பூட்டப்பிள்ளைகள் புலம்பல்*

உயர்த்து, பரந்து விரிந்து படர்ந்த குலமதில்
கூட்டிணைந்து கொண்டாடித் திரிந்தோம்
பெருவிருட்சத்தின் அடிவேரொன்று அறுந்ததேனோ
பூட்டாச்சி எனும் போது அதையெண்ணி சிரிப்பாயே
மாமரத்தின் பழமதை மடியில் கட்டி மற்றவர் அறியாமல்
எமக்கூட்டிய எங்கள் தெய்வத்திருமேனியே
ஆலயத்தில் பிரசாதம் வேண்டி அதையும் ஊட்டிடுவாய்
அன்பின் உருவே எமைத் துன்பத்திலாழ்த்திவிட்டு
ஓடி ஒழிந்ததெங்கே

**ஜீனுகா, லஜீக்கா, சார்க்கோணா, மேசா, கரிஷான், சசிஷன், சஷ்வினா, யனுசன், சஸ்வின், அகிஷா, அஷ்னா, பகீஷன், பவிஸ்னா, சஞ்சனா, றெகான்சாய், நிஷுக்ஷி, நிதிறா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளுப்பேத்தி புலம்பல்

நானறியா வயதானாலும் நாடிவந்தேன்
நான்காவது சந்ததியாய் உனை தேடி வந்தேன்
நான் அமர்ந்து படமெடுக்க நாவூறு நீ கழித்தாய்
கொள்ளுப் பேத்தியென கொண்டாடி மகிழ்ந்தாய்
நானறிந்து கொண்டாடமுன் கொள்ளுப்பேத்தியை
கொடிய அரக்கன் கொண்டு சென்ற தெங்கே

அயானா

## உற்றார் உறவினர் பரிதவிப்பு

ஊரும் உறவும் எப்பவும் தேவை என்பாய்
உற்றார் உறவினர் பிரிவு விரும்பாய்
உறுதுணையாய் நீயிருந்து உதவினாய்
ஊற்றெடுக்கும் உன் அன்பால் எமைக் கவர்ந்தாய்
ஊக்கமுடன் உன் குல தெய்வப் பணி செய்தாய்
ஊரில் குடி கொண்ட அறத்தியம்பாள் உன் தெய்வமென்றாய்
அறத்தி முருகன் கடமை தவறாதிருந்தாய்
தாயே பாக்கியமென்ற நாமமே
எமையெல்லாம் விட்டு நீண்ட தூரம் சென்ற தெங்கே

"அ" என உயிராய்
"ம்" என மெய்யாய்
"மா" என உயிர் மெய்யாய்
ஐயிரண்டு திங்களாய்
எம்மை கருவில் சுமக்காது விட்டாலும்
இவ்வுலகில் அம்மா என்று அன்புரிமையுடன்
அணைக்கும் பாக்கியம் தந்த பாக்கியமே

"பிறக்கும் போது வறுமையாய் பிறப்பது தவறில்லை,
இறக்கும் போது வறுமையாய் இறப்பது தான் தவறு"

**தவராசா கௌரிசங்கர், கிருஸ்ணமூர்த்தி சஞ்சீவன்,**
**பொன்னையா கார்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

*நேரிசை வெண்பா*

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்*
*நிஷ்டையுங் கைகூடும், நிமலர்அருள் கந்தர்*
*சஷ்டி கவசந் தனை.*

காப்பு

*அமரர் இடர்தீர அமரம் புரிந்த*
*குமரன்அடி நெஞ்சே குறி*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற

மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்

நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியுந்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்

லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கா முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர வடியிணை அருள்வேல் காக்க

கைகளிரண்டுங் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க

அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்

பிள்ளைக டின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்

எல்லிரு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு

கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெகுண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகமொழி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே
இடும்பனை யழித்த இனியவேல் முருகா

தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக

ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்

பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்

கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்

திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்

கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யார் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வார்க்கு உவந்தமு தளித்த

குருபரன் பழிநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி

குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரஹண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன் றிநின்பதந் தாங்கவென்
        வெள்ளையுள்ளத்
தண்டா மைரக்குத் தகாதுகொ லோசக
        மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாகவுண்
        டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல
        கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர
        நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க
        யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக்
        குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல
        கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்த்துன்
        னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங்
        கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை
        சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல
        கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியும்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட
நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந்
நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல
கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங்
கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந்
தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு
அகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல
கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்
பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு
தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்
வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல
கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங்
கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பால முதந்
தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே சகல
கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான முங்கல்வி
சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி
னாசனஞ்சேர்
செல்விக் கரிதென்றொருகால முஞ்சிதை
யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல
கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலத்
தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன
நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல
கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல
கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக்க பயன் விளைக்கும் மிளகு, சுக்கு

## மிளகு

'பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்' என்பது பழமொழி. மிளகு அந்த அளவிற்கு நஞ்சு முறிப்பானாகச் செயற்படுகிறது. மிளகானது தங்கபஸ்மத்திற்கு இணையானது. கால்சியம், இரும்பு, பொஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும், கரோட்டின், தயாமின், ரிபோபிளவின், ரியாசின் போன்ற வைட்டமின்களும் மிளகில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் நரம்புத் தளர்ச்சி, நரம்புக் கோளாறு முதலியவற்றை அகற்றி நரம்புகளுக்கு ஊ-க்கம் தருகிறது. நரம்பு மண்டலம் துடிப்பாக இருந்தால் சிந்தனையும் அதைத் தொடர்ந்து செய்து முடிக்கும் வேகமும் சீராகத் தொடரும்.

### செயற்திறன் மிக்க வேதிப்பொருட்கள்:

மிளகில் எளிதில் ஆவியாகும் எண்ணெய், ஆல்கலாய்டு, புரதம், கனிமங்கள் உள்ளன. பிபிரைன், பெருபிரைன், பிபிரோனால், கேம்பினி, அஸ்கோர்பிக் அமிலம், கரோட்டின் ஆகியவை பிரித்தெடுக்கப் பட்டுள்ளன. காரசாரமான மிளகு உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. ஜீரணக் கோளாறு உடனே குணமாகிறது. ஜீரண உறுப்புகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுத் தொந்தரவில்லாமல் செயல்பட உதவுகிறது. உணவும் நன்கு செரிக்க ஆரம்பிக்கிறது. காய்ச்சலுடன் வயிற்று பொருமலையும் மிளகு தணிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்மல் மற்றும் சளியுடன் ஜலதோஷம் என்றால் இருபது கிராம் மிளகுத்தூளைப் பாலில் கொதிக்க வைத்து ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் சாப்பிடவும். ஜலதோஷத்துடன் கூடிய காய்ச்சலுக்கு இதேபோல் ஆறு மிளகைத் தூள் செய்து தண்ணீருடன் சாப்பிடவும். இல்லையெனில் பாலில் மிளகுத்தூளைக் கொதிக்க வைத்து அருந்தலாம். சாதாரண ஜலதோசத்திற்கும் காய்ச்சலுக்கும் நன்கு காய்ச்சிய பாலில் ஒரு சிட்டிகை மிளகுப் பொடியும், ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியும் கலந்து இரவில் ஒரு வேளை அருந்தி வர நல்ல பலன் தரும். சோம்பலாகவும், மந்தமாகவும் இருப்பவர்களும், ஞாபக மறதிக் குழந்தைகளும் மற்ற வயதுக்காரர்களும் ஒரு தேக்கரண்டித் தேனில் ஒரு சிட்டிகை மிளகுத்தூளைக் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வரவும்.

மிளகில் உள்ள பாஸ்பரஸ் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். ஆண்மைக் குறைபாடு உள்ளவர்களும், பெண்மைக் குறைபாடு உள்ளவர்களும் தினமும் நான்கு பாதாம் பருப்புகளுடன் ஆறு மிளகையும் தூளாக்கி பாலுடன் இரவில் அருந்தி வருவது நல்லது. குறைபாடுகள் குணமாகும். குழந்தையும் பிறக்கும். உடம்புவலி, பற்சொத்தை உள்ளவர்களும், மிளகைத் தினசரி உணவில் சேர்ப்பது நல்லது.

அடிபட்ட வீக்கங்கள், கீல் வாதம் முதலியவை களுக்கு மிளகிலை, தழுதாழை இலை, நொச்சியிலை இவை ஒவ்வொன்றையும் சம அளவாக எடுத்து தண்ணீரில் இட்டு அடுப்பேற்றி நன்கு காய்ச்சி அந்தச் சூடான நீரில் நல்ல துணியை நனைத்து ஒத்தடமிட நல்ல பலன் கிடைக்கும் பற்சொத்தை பல்வலி பேசும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நாற்றம் பற்கூச்சம் உள்ளவர்கள் சில நாட்களுக்கு மிளகுத்தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல்துலக்கி வரவும். மிளகு எல்லாவித விஷங்களுக்கும் ஒரு சிறந்த முறிவாகப் பயன்படுகிறது. ஒரு கைப்பிடி அறுகம் புல்லையும், பத்து மிளகையும் இடித்து கசாயமிட்டு குடித்து வர சகல விஷக்கடிகளும் முறியும். மிளகுடன் வெற்றிலை சேர்த்து லேசாக இடித்து நீரில் கொதிக்க வைத்து வடித்த குடிநீரை குடித்துவர மருந்துகளால், உணவுப்பண்டங்களால் ஏற்பட்ட நச்சுத்தன்மை நீங்கும்.

சிலருக்கு தலையில் முடி உதிர்ந்து வழுக்கை போலாகி விடும். இதற்கு மிளகுத்தூள், வெங்காயம், உப்பு மூன்றையும் அரைத்து வெட்டு உள்ள இடத்தில் தேய்த்து வர முடி முளைக்கும். மிளகு இரசமும், மிளகு சேர்ந்த உணவு வகைகளும் ஆரோக்கியத்தைத் தருவதுடன் மூளையின் கூர்மையையும் அதிகரிக்கும்.

**சுக்கு:**

ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி கால் லிட்டர் நீரில் போட்டு பாதியாகக் காய்ச்சி தேவையான அளவு பால், சர்க்கரை சேர்த்து இருவேளை சாப்பிட்டுவர வாயு அகன்று பசியுண்டாகும். தலைநோய், சீதளம், வாதக்குன்மம், விலாக்குத்து, வயித்துக்குத்து, நீர் பீனிசம், நீர் ஏற்றம், நீர் கோர்வை, கீல் பிடிப்பு, ஆசன நோய், பல் வலி, காது குத்தல், சுவாச ரோகம் ஆகியவை குணமாகும்.

சுக்கு 10 கிராம், மிளகு (Pepper) 6, சீரகம் (Cumin) 35, பூண்டுப் பல் 3, ஓமம் 10 கிராம், உப்பு 4 கல் ஓட்டில் வறுத்து 5 கிராம் வேப்பங்கொழுந்துடன் மைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைத்து 50 மில்லி வெந்நீரில் கலந்து வடிகட்டி குழந்தைகளுக்கு 1/2 சங்கு அளவு தாய்ப்பாலில் கலந்து 4 வேளை கொடுக்க வயிற்றுக் கோளாறு அனைத்தும் குணமாகும்.

சுக்கு (Dry Ginger), கடுக்காய்ப் பிஞ்சு, ஆவாரை வகைக்கு 10 கிராம் எடுத்து அரைத்து 1/2 லிட்டர் நீரில் போட்டு 1/4 லிட்டராக காய்ச்சி, வடிகட்டி 10 கிராம் பேதி உப்பு கலந்து குடிக்க ஆயாசமின்றி பேதியாகும். பேதி அதிகம் காணப்பட்டால் மோர் சாப்பிட நின்று விடும்.

சுக்கு, காசுக்கட்டி, கடுக்காய்த்தூள், இந்துப்பு சமஅளவாக எடுத்துப் பொடி செய்து பல்பொடியாகப் பயன்படுத்த பல் ஆட்டம், பல் சொத்தை, ரத்தக் கசிவு குணமாகும்.

CREATED BY VECTORPORTAL.COM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

# நன்றி நவிலல்

"பயன் தூக்கார் செய்த உதவி
நயன் தூக்கின் - நன்மை கடலிற் பெரிது"

2022ம் ஆண்டு 11ம் மாதம் 16ம் திகதி புதன்கிழமை அன்று இறையடி சேர்ந்த எமது அன்புத்தாயார் அமரர் சண்முகம் பாக்கியம் அவர்களது செய்தி கேட்டு உடன் உதவியோர்க்கும் உற்ற துணையாய் நின்று எம்துயரில் பங்கு கொண்டோர்க்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோர்க்கும் பனர் அச்சிட்டு வெளியிட்டோர்க்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசியூடாக அனுதாபங்கள் தெரிவித்தோர்க்கும் மலர் வளையங்கள் கொண்டு வந்து வைத்து ஆறுதலளித்தோர்க்கும், இறுதிக்கிரியைகளின் போது உதவியோர்க்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இந்நூலை அச்சிடுவதற்கு அனைத்து வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழ

**சண்முகம்* + பாக்**

- சரஸ்வதி + கனகரத்தினம்*
  - ரேணுகா + ஜீவரத்னம்
    - ஜீணுகா + மதிநிஷாந்
      - அயானா
    - லஜிக்கா
  - ரமேஸ் + தாமரை
    - சார்க்கோண்
    - மேசா
  - சுரேஸ் + ரேவதி
    - கரிஷாந்
- கயிலாயபிள்ளை + சந்திராதேவி
  - சசிகாந்தன் + கௌசலா
    - சசிஷன்
    - சஸ்வினா
  - சந்திரிக்கா + சிவரமணன்
    - யனுஷன்
    - சஸ்வின்
  - சன்சிகா + துஷ்யந்தன்
    - அகிஷா
    - அஷ்னா
  - சபிக்கா + ராஜ்குமார்
    - பகிஷன்
    - பவிஸ்னா
  - சஞ்சிகாந்தன் + நிறோஜா
    - சஞ்சனா
- யோகநா
  - துளசிக
    - ெ
  - பகீரதன்
  - பவித்தி
- நிமலநாதன் + உதய
  - நிவ்வியன்
  - நிவ்வியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

முகம்* + பாக்கியம்

- யோகநாதன் + கிருபாலட்சுமி
  - துளசிகா + பிருந்தன்
    - றெகாண்சாய்
  - பகீரதன்
  - பவித்திரன்
- தில்லைநாதன் + பவானி
  - விஸ்னுகா
- லைநாதன் + உதயரூபி
  - நிவ்வியன்
  - நிவ்வியா
- சத்தியநாதன் + அருட்செல்வி
  - நிஷானா
- பத்மநாதன் + பாக்கியலட்சுமி
  - யசிக்கா + உமாகரன்
    - நிலுக்ஷி
    - நிதிறா

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் ?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org